(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 105.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2021 நவம்பர் 10, புதன்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

37/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது மக்களுக்கான சிறந்த சுகாதாரச் சேவையை வழங்குவதற்கு தற்போது தேவைப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2019.01.01 ஆம் திகதி ஆகும் போது அரச சேவையில் ஈடுபட்டிருந்த மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) எதிர்வரும் வருடங்களில் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் திட்டங்களை தயாரித்துள்ள முறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

275/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் திராட்சை உற்பத்தி ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) திராட்சை உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள திராட்சை இனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கையில் திராட்சை செய்கைக்கு உகந்த காலநிலை காணப்படுகின்ற மாவட்டங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு திராட்சை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை திராட்சையை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் திராட்சை ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

446/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களம் கொண்டுள்ள புகையிரத என்ஜின்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி என்ஜின்களில் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரத என்ஜின்களின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படாத புகையிரத என்ஜின்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி புகையிரத என்ஜின்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(v) மேற்படி புகையிரத என்ஜின்களை துரிதமாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

724/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஔடத விற்பனை நிலையங்கள் (ஒசுசல மருந்தகங்கள்) நிறுவப்படவில்லையென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டங்களில் வசிக்கும் சாதாரண மக்கள் சில ஔடதங்களைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மாவட்டங்களில் இற்றைவரையில் அரச ஒசுசல மருந்தகங்களை ஆரம்பிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டங்களில் அரச ஒசுசல மருந்தகங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

820/2020

கௌரவ சாந்த பண்டார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படுகின்ற சிறைச்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சிறைச்சாலைகளில் தடுத்து வைத்திருக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை மற்றும் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) கொள்ளளவையும் தாண்டி தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலதிக சிறைக் கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலதிக சிறைக் கைதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

849/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "பிபிதெமு பொலன்னறுவை" மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் கதுருவெல மாற்று வீதியின் கி.மீ 0 + 000 முதல் கி.மீ. 2 + 687 வரையிலான பகுதியை, நான்கு ஒழுங்கைகளைக் கொண்ட வீதியாக விரிவாக்கும் பொருட்டு தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபைக்கும், அரச விதை நெல் உற்பத்திப் பண்ணைக்கும் சொந்தமான மற்றும் பிரதேசவாசிகளினால் பயன்படுத்தப்பட்ட மேட்டு நிலங்கள், சேற்று நிலங்கள், தரிசு நிலங்கள், வீட்டுத் தோட்டக் காணிகள் மற்றும் நிலையான கட்டிடங்களைக் கொண்ட காணிகள் என்பன அரசாங்கத்திற்குச் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை ஒவ்வொரு காணி உரிமையாளர்களுக்கும் அமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட வீதிப் பகுதியை விரிவாக்கும் திட்டத்தின் கீழ் தற்போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தூரம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

997/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சிப் பாடநெறிகளை அண்மைக்காலத்தில் கற்று முடித்துள்ள டிப்ளோமாதாரிகளுக்கு இதுவரை ஆசிரியர் நியமனம் வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) அதன் காரணமாக அண்மைக்காலம் முதல் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாகவும், பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்காகவும் கல்வியியற் கல்லூரிகளின் பயிற்சிப் பாடநெறிகளை கற்று முடித்துள்ள மேற்படி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1063/2020

கௌரவ அசோக பிரியந்த,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் யானை –மனித மோதல் இடம்பெறுகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளில் சஞ்சரிக்கின்ற காட்டு யானைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி காட்டு யானைகளை விரட்டுவதற்காக இருக்கின்ற அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) மேற்படி காட்டு யானைகளை விரட்டுவதற்கான அலுவலர்களின் பற்றாக்குறையை தவிர்த்துக் கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி அமைச்சர்,— ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல்,— ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளின் பயன்பாடு, தொகைக்குவிப்பு, தயாரிப்பு மற்றும் கைமாற்றல் என்பவற்றைத் தடைசெய்தலும் அழித்துவிடுதலும் பற்றிய சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைாவன கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

நீதி அமைச்சர்,— நீதித்துறை (திருத்தம்),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 4 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

4.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

“சஹன சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 செப்தெம்பர் 29 ஆம் திகதிய 2247/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2021 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 2251/64 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

தொழில் அமைச்சர்,— பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் 2021.10.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

காணி அமைச்சர்,— காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (460 ஆம் அத்தியாயமான) காணி எடுத்தற் சட்டத்தின் 63(2)(ஊ) ஆம் பிரிவின் கீழ் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 2244/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

ஒதுக்கீடு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

கைத்தொழில் அமைச்சர்,— தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 14(1)(ஊ) மற்றும் 15 ஆம் பிரிவுடன் உடன் வாசிக்க வேண்டிய, 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டு, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 53 இன் கீழ் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2221/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு, மின்சாரவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் மற்றும் காடு மீள்வளர்ப்பு அத்துடன் காட்டு வள அபிவிருத்தி உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடித்தல் இராஜாங்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 09 ஆம் திகதிய 2222/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

சுற்றுலாத்துறை அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2020 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 2192/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61(1)(தஅ) மற்றும் (தஆ) ஆம் பிரிவுகளின் கீழ் கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2019 யூன் 03 ஆம் திகதிய 2126/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61(1)(ப) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2021 மார்ச் 12 ஆம் திகதிய 2218/64 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

நீதி அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45(1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2021 மே 03 ஆம் திகதிய 2226/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2021 யூலை 08) [1].

* 18.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 06 ஆம் திகதிய 2226/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

20.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

1906/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு வன நிலங்கள் சாட்டப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இல்லையெனில், வன நிலங்களைப் பெற்றுத்தருமாறு இலங்கை மகாவலி அதிகாரசபையினால் அத்திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது சம்பந்தமான தகவல்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மஹஓயா, கல்வலயாய வனத்தை, அரசாங்கத்திற்கு உரித்தான பாதுகாக்கப்பட்ட வனமொன்றாக வர்த்தமானியில் பிரசுரிக்க பிரேரிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு உரித்தான பாரிய வனப் பகுதி வெட்டி வெளியாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வனப் பாதுகாப்புத் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனில், அதற்கான காரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி கல்வலயாய வனத்தை சேதப்படுத்தியுள்ள ஆட்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் பெயர்கள், முகவரிகள், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதிகள் மற்றும் அவர்களுக்கு நீதிமன்றம் விதித்துள்ள தண்டனைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) தற்போது, பாரியளவிலான இயந்திரசாதனங்களைப் பயன்படுத்தி மஹஓயா, பொல்லேபெத்த, கல்வலயாய மற்றும் வராப்பிட்டிய ஆகிய வனங்கள் வெட்டி வெளியாக்கப்பட்டுள்ளமை, காடழிப்பாக ஏற்றுக்கொள்வாரா என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1977/2021

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கடற்படையில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

2021/2021

கௌரவ மதுர விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப்படையில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

2026/2021

கௌரவ மதுர விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை இராணுவத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?